INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி. மலர்

மகளிர் சுய உதவிக்குழு
## புத்துணர்ச்சி இதழ்

✦ மொட்டு 14 ✦ ஏப்ரல் - செப்டம்பர் 2021 - தனிச்சுற்றுக்கு மட்டும் - ✦ மலர் 39

## தமிழ்நாடு அரசின் பொது நிவாரண நிதிக்கு ஐ.வி.டி.பி.யின் பங்களிப்பு ₹ 1 கோடி



IVDP
ESTD 1979

**கொரோனா நிவாரண உதவியாக ஐ.வி.டி.பி. வழங்கிய மொத்தத் தொகை**

**₹ 3.72 கோடி**

## உள்ளே...




கொரோனா நிவாரணப் பணிகள் ...04



ஐ.வி.டி.பி. தொழிற்பயிற்சி மையம் ...09



கோட்டையூர் நேதாஜி பள்ளி பன்னோக்கு கலையரங்கம் ...16



கனவு இல்லம் ...22



கவிதைத் துளிகள்... ...24


# இயக்குநர் இதயத்திலிருந்து

அன்பு உள்ளங்களே!

வணக்கங்களும்! வாழ்த்துகளும்!

ஆறு மாத நீண்ட இடைவெளிக்குப் பின் இம்மலர் வாயிலாக உங்கள் அனைவரையும் தொடர்பு கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆறு மாத இடைவெளியில் எவ்வளவோ மாற்றங்கள் நம் வாழ்விலும், வீட்டிலும், நாட்டிலும் நடந்தேறிவிட்டது. இவை அனைத்தையும் கடந்து நம் நிறுவனமும், நாம் ஒவ்வொருவரும் தற்போது வாழ்ந்து வருகிறோம் என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை.

இவ்வாறு கொரோனா எனும் பெருந்தொற்றினால் உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளும், பொருள் இழப்புகளும் நிகழ்ந்த இக்கால கட்டத்தில் நம்மில் பலர் தங்கள் குடும்ப உறவுகளை இழந்தும், ஏன் நம் உறுப்பினர்கள் பலரையே நாம் இழந்துள்ளோம் என்பது மிகவும் அதிர்ச்சியளிக்கும் நிகழ்வாகும்.

இக்கொடிய நோய்த்தொற்றின் காரணமாக நம் உறுப்பினர்களில் 370 பேர் தங்களின் அன்புக்குரிய கணவன்மார்களை இழந்துள்ளனர் என்பதும், 5 உறுப்பினர்களின் குழந்தைகள் தாய் தந்தை இருவரையும் இழந்து ஆதரவற்ற நிலைக்கு சென்றுள்ளனர் என்பதும் மிகவும் வருந்ததக்க நிகழ்வாகும். இவ்வாறு ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்ட இவர்களின் துயரத்தில் **ரூ. 1.90 கோடி** நிதியுதவி வழங்கி ஐ.வி.டி.பி.யும் பங்கெடுத்துள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேலும், நம் கனவுத்திட்டமான ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கென சொந்த கட்டிடத்தை உருவாக்கி தனி வங்கி வசதியளிக்கும் திட்டம் பல்வேறு தடங்கல்களைத் தாண்டி நிறைவு பெற்றது குறிப்பிடத்தக்கது. உயரிய கட்டமைப்பு வசதிகளோடு ரூ. 9 கோடி செலவில் அழகுற கட்டி எழுப்பப்பட்டு, நாட்டிலேயே முன்மாதிரி மையமாக உருவாக்கப்பட்டுள்ள இத்தொழிற்பயிற்சி மையத்தைக் கண்டு வியக்காதவர் எவருமில்லை. இதை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு, நம் குழுக்களின் தரத்தையும், நம் பணிகளையும் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டியது நம் அனைவரின் கடமையாகும்.**

இறுதியாக கொரோனா நோய்த் தொற்றிலிருந்து நம்மையும், நம் குடும்பங்களையும் காத்துக்கொள்ள அரசு வழங்கியுள்ள நடைமுறைகளை கவனமுடன் பின்பற்றுவோம்.



“

**தடுப்பூசி**
முறையாக
செலுத்திக்கொள்வோம்!
**கொரோனாவை**
முற்றிலுமாக
வெல்வோம்!

”

என்றும் மக்கள் பணியில்...

**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர்/தலைவர்

# கொரோனா நிவாரணப் பணிகள்

**கொரோனா வைரஸ் தொற்றால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த உலகமே முடங்கிப் போய், மக்கள் பலர் வேலையின்றி துன்பப்படும் வேலையில் ஐ.வி.டி.பி நிறுவனம் அவர்களின் துன்பத்தைத் துடைக்கும் பொருட்டு பல்வேறு வகையில் உதவி வருகிறது.**

கொரோனாவின் **முதல் அலை** தாக்கத்தின் போது, கொரோனா நோய் தடுப்புப் பணிகளுக்காகவும், இருளர், நரிக்குறவர், கிராமியக் கலைக்குழுவினர், திருநங்கைகள், ஐ.வி.டி.பி பணியாளர்கள் மற்றும் மாணவியர்களுக்காகவும், **ரூ. 61.5 இலட்சம்** மதிப்புள்ள உணவுப் பொருட்களைக் கொரோனா நிவாரண உதவியாக வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



**தற்போது இரண்டாம் அலை தாக்கத்தின் போதும் தன்னுடைய உதவிக்கரத்தை நீட்ட மறக்கவில்லை ஐ.வி.டி.பி நிறுவனம். இதன் தொடக்கமாக தமிழக அரசின், கொரோனா பேரிடர் நிவாரணப் பணிக்களுக்காக தமிழக முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு ரூ. 1 கோடியை, காசோலையாக ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேரில் சென்று வழங்கினார்.**



"ஆசை இல்லா மனம் வேண்டும், நிம்மதியான வாழ்க்கை வாழ..."

பத்திரிக்கை நிருபர்களுக்கும், கிருஷ்ணகிரி நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் முன்களப்பணியாளர்களுக்கு **ரூ. 3.16 இலட்சம்** மதிப்பிலான நிவாரணப் பொருட்களை வழங்கினார்.




ஐ.வி.டி.பி நிறுவனத்தில் பணியாற்றும் பணியாளர்களின் குடும்பங்கள் இக்கொரோனா பேரிடர் காலத்தில் துன்புறா வண்ணம் **ரூ. 10.20 இலட்சம்** மதிப்பிலான நிவாரணப் பொருட்களை வழங்கினார்.







கொரோனாவால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு உதவும் நோக்கத்தில் பெங்களூரைச் சார்ந்த திரு.**பெலவேந்திரா** என்பவருக்கும், ஆனைக்கல்லைச் சார்ந்த திரு. **அந்தோனி முத்து மகிமைநாதன்** என்பவருக்கும் மற்றும் ஐ.வி.டி.பி பணியாளர்களான திருமதி. **தனலட்சுமி** பர்கூர், திருமதி. **மலர்** காவேரிப்பட்டிணம், மற்றும் திருமதி. **கற்பகம்** பாரூர் ஆகியோரின் மருத்துவ சிகிச்சைக்காக **ரூ. 2.90 இலட்சம்** வழங்கி உதவினார்.




# கொரோனாவால் கணவரை இழந்த

## 370 ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# சிறப்பு நிவாரண நிதியுதவி

# ₹ 1.90 கோடி

"வீழ்ந்தாலும் மண்ணில் விதையாகத் தான் வீழ்வோம்!
வாழ்ந்தாலும் இம்மண்ணின் புதுமைப்பெண்ணாய் வாழ்வோம்!"

என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருந்த ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாழ்வில் கொரோனா எனும் கோரப்புயலின் பெரும் தாக்கத்தால், கடந்த ஜனவரி முதல் ஆகஸ்டு வரை **370 உறுப்பினர்கள்** தங்கள் கணவரை இழக்க நேரிட்டது. அவ்வாறு தங்கள் துணைவரை இழந்த உறுப்பினர்களுக்கு நம்பிக்கையூட்டவும், உங்கள் துன்பத்தில் நாங்களும் பங்கெடுக்கிறோம் என்பதை உறுதியளிக்கும் வகையிலும், பொருளாதார ரீதியாக அவர்களுக்கு உதவிடும் பொருட்டும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் **தலா ரூ. 50 ஆயிரம்** எனவும், கொரோனா நோய்த்தொற்றினால் தாய், தந்தை இருவரையும் இழந்த ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் **5 குழந்தைகளுக்கு தலா ரூ. 1 இலட்சம்** எனவும் மொத்தம் **ரூ. 1.90 கோடி**யை வழங்க ஐ.வி.டி.பி நிறுவனம் முடிவு செய்தது.



அதன்படி 26.09.2021 அன்று நடைபெற்ற நிகழ்வில் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் கூடுதல் முதல்வர் அருட்தந்தை முனைவர். **மரிய ஆரோக்கியராஜ்** அவர்கள், கணவரை இழந்த உறுப்பினர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வகையில் உரையாற்றினார். இந்நிகழ்வில் இந்தியன் வங்கியின் தருமபுரி மண்டல மேலாளர் திரு. **பழனி** அவர்கள் தலைமை வகிக்க, ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் நிவாரண உதவிகளை வழங்கினார்.

இரண்டாம் கட்டமாக 29.09.2021 அன்று நடைபெற்ற நிகழ்வில் அருட்தந்தை முனைவர். **விமல்தாஸ்** அவர்கள், கணவரை இழந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செய்தி வழங்கினார். இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு கிராம வங்கியின் பொது மேலாளர் திரு. **தாமோதிரன்** அவர்கள் தலைமை வகிக்க, ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள், நிவாரண நிதி உதவியோடு அனைத்துப் பயனாளிகளுக்கும் தலா **ரூ. 1025** மதிப்பிலான உணவுப் பொருள் தொகுப்பையும் வழங்கினார்.

| | |
|---|---|
| **உணவு பொருள்** நிவாரணமாக (முதல் அலை) | **₹ 61.50 இலட்சம்** |
| **மருத்துவ சிகிச்சை / உணவு நிவாரணம்** | **₹ 20.26 இலட்சம்** |
| **தமிழக அரசின் நிவாரண நிதிக்கு** | **₹ 1 கோடி** |
| **கணவரை இழந்த 370 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு** | **₹ 1.90 கோடி** |

**கொரோனா நிவாரண உதவியாக ஐ.வி.டி.பி. நிறுவனம் இதுவரை வழங்கிய மொத்தத் தொகை ₹ 3.72 கோடி**

# கொரோனா தடுப்பூசி

## செலுத்திக் கொண்ட ஐ.வி.டி.பி உறுப்பினர்கள்




கொரோனா நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, நாடு முழுவதும் மக்கள் கொரோனா தடுப்பூசி செலுத்தி வருவது நாம் அனைவரும் அறிந்ததே. இதன் தொடர்ச்சியாக ஐ.வி.டி.பி நிறுவனமும், தனது அனைத்து சுய உதவிக்குழு உறுப்பினர்களையும் 2 தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறு ஊக்குவித்து வருவது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக பெரும்பாலானோர் தடுப்பூசி செலுத்திக் கொண்டு வருகின்றனர்.

### அதன் விபரம் வருமாறு

| | |
|---|---|
| ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | 14,840 |
| ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | 2,67,148 |
| **தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை** | **2,03,439 (76%)** |
| **முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை** | **1,28,612 (48%)** |
| **2ஆம் தவணை தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை** | **74,827 (28%)** |

### கொரோனாவிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள ஒரு சில உணவு வழிமுறைகள்...

**இஞ்சி**

எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க என்னென்ன உணவுகளை எடுத்துக் கொள்ளலாம் என்பதை பார்ப்போம். முதலில் இஞ்சி ஒரு விரல் அளவு இஞ்சியை எடுத்து அதை வெந்நீரில் போட்டு கொதிக்க வைத்தோ அல்லது டீயில் போட்டோ குடிக்கலாம். இதை ஒரு நாளைக்கு இரு வேளைகள் குடிக்கலாம்.

**பழ வகைகள்**

இரண்டாவது பச்சைக் காய்கறிகள். அரைக்கீரை, சிறுகீரை, முளைக்கீரை, முருங்கை கீரை உள்ளிட்ட கீரை வகைகளைச் சாப்பிட்டால் மிகவும் நல்லது. மூன்றாவதாக பார்த்தால் வைட்டமின் சி இருக்கும் உணவுகளை சாப்பிட வேண்டும். கொய்யாப்பழம், ஆரஞ்சு, நெல்லிக்காய் ஆகியவற்றை சாப்பிடலாம்.

**மஞ்சள்**

அடுத்து கடைசியான விஷயம் மஞ்சள். கிருமிநாசினியான மஞ்சளை தினந்தோறும் உணவில் சேர்த்து வர வேண்டும். ஒரு டீஸ்பூன் மஞ்சளை சாம்பார், ரசம் உள்ளிட்டவற்றில் சாப்பிடலாம். இதையெல்லாம் சாப்பிட்டால் நிச்சயம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சாப்பிடலாம். மிகவும் நல்லது. முக்கியமாக வைரஸ் பரவும் காலங்களில் இந்த உணவுகளை சாப்பிடுவது அவசியம்.



"வாய்ப்புகளை தேடி அலையாதே வாய்ப்புகளை உருவாக்கு...!"

# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்களுக்கான
# தொழிற்பயிற்சி மையம்

**₹ 9 கோடி**

*"கனவு காணுங்கள்.*
*ஆனால் கனவு என்பது*
*தூக்கத்தில் வருவது அல்ல.*
*உங்களைத் தூங்க விடாமல்*
*செய்வது எதுவோ அதுவே கனவு."*

என்னும் அப்துல்கலாமின் வாக்கிற்கிணங்க, நம் ஐ.வி.டி.பி யின் நிறுவனர் திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்களின் கனவு குழந்தைதான் சுய உதவிக்குழுக்களுக்காக நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ள புதிய தொழிற்பயிற்சி மையம்.

**ரூ. 9 கோடி செலவில் (நிலம் ரூ. 3.5 கோடி + கட்டிடம் ரூ. 5.5 கோடி) தரைத்தளம் மற்றும் 3 தளங்களுடன், சுய உதவிக்குழுக்களுக்கென்றே நிறுவப்பட்ட இம்மையத்தில் 2000க்கும் மேற்பட்ட சுய உதவிக்குழுக்களை நிர்வகிக்கும் பொருட்டு 8 கிளை அலுவலகங்களும், தொழில் பயிற்சிக்கென தனித்தளமும், பயிற்சி அரங்குகளும், பல்வகை பயன்பாட்டுக்கான கலையரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்துத் தளங்களிலும் உறுப்பினர்களின் நலன் கருதி நவீன கழிப்பிட வசதிகளும், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் செய்யப்பட்டுள்ளது.**






புதிய தொழிற் பயிற்சி மையத்தின்
முகப்பு வாயிலில் அமைக்கப்பட்டுள்ள
**அழகிய அருவி**

நீர் வாழ்வின் ஆதாரம்!
மகளிர் சுய உதவிக்குழுக்களின்
கூட்டுறவு வாழ்வைப் புலப்படுத்தும்
குறியீடாகக் கல்!
அதில் அனைவருக்கும் பொழியும்
மழையருவியாக
ஐ.வி.டி.பி.!




மகளிர் சுய உதவிக்குழுக்களின் நிதித் தேவைகளுக்காக கடன் வழங்கும் பொருட்டு,
**தமிழ்நாடு கிராம வங்கி**யின் தனி வங்கிக்கிளை
இம்மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.




## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மையம்

# திறப்பு விழா மற்றும் 42வது நிறுவன தின விழா

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் **42வது ஆண்டு நிறுவன தினம்** மற்றும் சுய உதவிக்குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மையத் திறப்பு விழா 11.08.2021 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு தமிழ்நாடு கிராம வங்கியின் தலைவர் திரு. **செல்வராஜ்** அவர்கள் தலைமை வகிக்க, இந்தியன் வங்கியின் பொது மேலாளர் திரு. **சூரி பாபு** முன்னிலையில் ஐ.வி.டி.பி நிறுவனத்தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் பயிற்சி மையத்தை திறந்து வைத்தார்.



# விழாவின் சிறப்பம்சங்கள்




இந்நிறுவன தின விழாவின் சிறப்பம்சங்களாக 2020 - 2021 ஆம் ஆண்டு ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பணிகள் குறித்த **ஆண்டறிக்கை** வெளியிடப்பட்டது.

ஐ.வி.டி.பி பணியாளர்கள் பயனுறும் வகையில், அவர்கள் மகளிர் சுய உதவிக்குழுக்களை வழிநடத்தும் நெறிமுறைகளைக் கொண்ட **பணிக் கையேடு** வெளியிடப்பட்டது.






"எவ்வளவு பெரிய பிரச்சனைக்கும் கையளவு மனதிடம் தான் தீர்வு."




மும்பையைச் சார்ந்த **அலர்ட் இந்தியா** (Alert India) நிறுவனத்தின் தொழுநோய் நிவாரணப் பணிகளுக்காக அந்நிறுவனத்தின் முதன்மை நிர்வாகி திரு. **அந்தோணிசாமி** அவர்களிடம் **ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை** ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கினார்.

கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டு, பெற்றோர் இருவரையும் இழந்த ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினரின் பெண் குழந்தைக்கு **ரூ. 1 இலட்சம்** நிவாரண நிதியாக வழங்கப்பட்டது.







ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு **தமிழ்நாடு கிராம வங்கியின்** இலண்டன் பேட்டை கிளை வாயிலாக **ரூ. 120 கோடி** வங்கி கடன் வழங்கப்பட்டது.



ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கடன் உதவி பெற்று, பல்வேறு வகையான சுயத்தொழில் செய்து முன்னேற்றம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களால் தயாரிக்கப்பட்ட ஊதுபத்தி, கற்பூரம், மண்ணால் செய்யப்பட்ட பானை, பொம்மைகள், புடவைகள், ஊறுகாய், மூங்கிலால் செய்யப்பட்ட கூடை, முறம், புளி மற்றும் கயிறு போன்ற பொருட்கள் சிறப்பு விருந்தினர்கள் மற்றும் உறுப்பினர்களின் பார்வைக்காக ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்கான தொழிற்பயிற்சி மையத் திறப்பு விழாவின் போது காட்சிப்படுத்தப்பட்டது.

## ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் தொழிற்பயிற்சி பெற அரிய வாய்ப்பு!

நம் ஐ.வி.டி.பி நிறுவனத்தால் சமீபத்தில் துவக்கப்பட்டுள்ள சுய உதவிக்குழுக்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் தையல், கணினி போன்ற பல்வேறு தொழிற்பயிற்சிகள் இலவசமாக பெற வசதி செய்யப்பட்டுள்ளது. எனவே தொழிற்பயிற்சி பெற விரும்பும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகள், தங்கள் கிளை அலுவலகங்கள் வாயிலாக ஐ.வி.டி.பி தலைமை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.



# ஐ.வி.டி.பி. சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு
# தையற்தொழில் பயிற்சி

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் பொருட்டு, ஐ.வி.டி.பி நிறுவனம் அண்மையில் துவங்கியுள்ள தொழிற்பயிற்சி மையத்தில், **முதல் பயிற்சியாக கிருஷ்ணகிரி இந்தியன் வங்கி ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக 31 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு 30 நாட்கள் தையற்பயிற்சி** துவங்கப்பட்டது. ஐ.வி.டி.பி.யின் நிறுவனர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் முன்னிலையில், இந்தியன் வங்கியின் கிருஷ்ணகிரி மண்டல மேலாளர் திரு. **பழனி** அவர்கள் பயிற்சியைத் துவக்கி வைத்தார்.



தற்பொழுது வழங்கப்படும் இப்பயிற்சிக்காகவும், இனிவரும் காலங்களில் நடத்தப்படும் பயிற்சிகளில் பங்கேற்கும் உறுப்பினர்கள் பயனடையும் வகையிலும் **ரூ. 4,53,100/- மதிப்பிலான 45 தையல் இயந்திரங்கள்** இப்பயிற்சி மையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு

# பன்னோக்கு கலையரங்கம்

## மற்றும் நவீன கழிவறைகள்

₹ 1.08 கோடி



ஏழை, எளிய மலைவாழ் குழந்தைகளுக்கும் தரமான கல்வி கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் ஐ.வி.டி.பி தலைவர் அவர்களால், அஞ்செட்டி வட்டம், கோட்டையூரில் 2001 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதே ஐ.வி.டி.பி நேதாஜி துவக்கப் பள்ளி. இப்பள்ளி படிப்படியாக வளர்ந்து இன்று மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. **உரிகம், தக்கட்டி, மல்லஹள்ளி, அத்திநத்தம், நூருந்தசாமி மலை, சிவபுரம் போன்ற சுற்றியுள்ள மலைக்கிராமங்களிலிருந்து வரும் 500க்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு தரமான ஆங்கிலக் கல்வியை மிகக் குறைந்த கட்டணத்தில் வழங்கி வருகிறது.** தற்போது இப்பள்ளியை சென்னை மாதவரம் தூய அன்னாள் சபை அருட்சகோதரிகள் நிர்வகித்து வருகின்றனர்.




ஐ.வி.டி.பி. நேதாஜி மெட்ரிக் பள்ளிக்கு, கலைநிகழ்ச்சிகள் மற்றும் பள்ளி விழாக்களை நடத்த கலையரங்கம் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கழிவறை போன்ற வசதிகள் இல்லாததால், ஐ.வி.டி.பி தலைவர் அவர்கள் **அனைத்து வசதிகளையும் கொண்ட புதிய பன்னோக்கு கலையரங்கையும், நவீன கழிவறை வளாகத்தையும் கட்டுமானம் செய்து வழங்கினார். இதன் மொத்த மதிப்பு ரூ.1.08 கோடி**யாகும்.




கடந்த 25.09.2021 அன்று, கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் பள்ளியில் நடைபெற்ற திறப்பு விழாவில், தூய அன்னாள் சபையின் பெங்களூர் மாநில தலைமை சகோதரி, **ஜாய்ஸ் தெரசியா** அவர்கள் முன்னிலையில், ஐ.வி.டி.பி. நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் **ரூ.84 இலட்சம்** மதிப்பிலான பன்னோக்கு கலையரங்கத்தையும், **ரூ.23.5 இலட்சம்** மதிப்பிலான நவீன கழிவறை வளாகத்தையும் திறந்து வைத்தார்.






### கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி மாணவர்களுக்கு

# கல்வி உதவித் தொகை நூலகப் புத்தகங்கள் மற்றும் பாடப் புத்தகங்கள்

**₹ 5.6 இலட்சம்**

கோட்டையூரில் இயங்கி வரும் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியானது ஐ.வி.டி.பி நிறுவனரால் துவங்கப்பட்டு, தற்போது மாதவரம் புனித அன்னாள் சபை அருட்சகோதரிகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. கொரோனா தொற்றின் காரணமாக குழந்தைகளின் கல்விக் கட்டணத்தைக் கூட, பெற்றோர்கள் செலுத்த இயலாத நிலையில் ஐ.வி.டி.பி நிறுவனம் மலைவாழ் குழந்தைகளுக்கென சிறப்பு கல்வி உதவித்தொகை திட்டத்தை கடந்த இரண்டு வருடங்களாக செயல்படுத்தி வருகிறது.

அதன்படி, பெற்றோர் ஒருவரையோ அல்லது இருவரையும் இழந்த மாணவர்களுக்கும் மற்றும் ஒரு குடும்பத்தில் இருந்து இரண்டிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பள்ளியில் பயின்றால் அவர்களில் ஒருவருக்கு கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது.




மேலும், இவ்வாண்டு முதல் இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால், அப்பள்ளியில் மேல்நிலை வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு தலா ரூ.10,000 எனவும் கல்வி உதவித்தொகை வழங்கி வருகிறது.

**இத்திட்டத்தின் மூலம் இந்த ஆண்டு 42 மாணவர்களுக்கு ரூ.3.71 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.**

அதுமட்டுமின்றி மாணவர்களின் வாசிப்புத் திறனை ஊக்குவிக்கும் நோக்கில் நூலகத்திற்கு தேவையான புத்தகங்களும், கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக மாணவர்கள் பாடப் புத்தகங்களுக்கு பணம் கட்டுவதில் சிரமம் ஏற்பட்டதால் பாடப் புத்தகங்களுக்காக ரூ.1.9 இலட்சம் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கியுள்ளது.

**இவற்றின் மொத்த மதிப்பு ரூ.5.6 இலட்சம் ஆகும்.**

## கிருஷ்ணகிரி, புனித அன்னாள் ஆரம்பப் பள்ளி

# மாணவிகளின் கலைத்திறனைப் பாராட்டி புத்தகப்பைகள்



இன்று பல துறைகளில் சாதிக்கத் துடிக்கும் மாணவச் செல்வங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கிருஷ்ணகிரி, புனித அன்னாள் ஆரம்பப் பள்ளியில் கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற **17 மாணவிகளுக்கு**, அவர்களின் கலைத்திறனைப் பாராட்டி **ரூ. 20,000** மதிப்பிலான **புத்தகப்பைகளை** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் வழங்கினார்.

### பீட்ரூட்டின் அற்புதங்கள்



- கர்ப்ப காலத்தில் மிக சிறந்த உணவாக உதவுகிறது.
- நினைவாற்றலை அதிகரிக்கிறது.
- உடம்பில் உள்ள நச்சுத் தன்மையை நீக்குகிறது.
- உடம்பில் காயங்களை ஆற்றுவதில் பெரும் பங்கு வகிக்கிறது.
- கொழுப்புச்சத்து மற்றும் இரத்த அழுத்தத்தை குறைக்கிறது.
- இளமையில் முதுமையை தவிர்க்கிறது.
- எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.
- மலச்சிக்கலைக் குணப்படுத்த உதவுகிறது.
- உணவு செரித்தலில் முக்கிய பங்கு வகிக்கிறது.

# கெரிகேபள்ளி அரசு பள்ளிக்கு
# தளவாடப் பொருட்கள்

₹ 56 ஆயிரம்




கெரிகேபள்ளி,
அரசினர் மேல்நிலைப் பள்ளியில்
மாணவர்கள் மற்றும்
ஆசிரியர்கள் பயன்பாட்டிற்கு
போதிய **தளவாட பொருட்கள்**
**(Chair & Rack)**
இல்லாத நிலையில்,
அப்பள்ளி தலைமையாசிரியரின்
வேண்டுகோளிற்கிணங்க
ஐ.வி.டி.பி நிறுவனம்
**ரூ. 56,000** மதிப்பிலான
தளவாடப் பொருட்களை
அப்பள்ளிக்கு வழங்கியது.

# ஓய்வுப் பெற்ற வருவாய்த் துறை
# அலுவலர்களுக்கு தங்க நாணயம்

₹ 23 ஆயிரம்



தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறையில் பல்வேறு நிலைகளில் பணிபுரிந்து ஓய்வுப் பெற்றவர்களில் 80 வயதை நிறைவு செய்த **5 அலுவலர்களுக்கு தலா ரூ. 4510** மதிப்பிலான தங்க நாணயங்களை வழங்கி கௌரவித்தார் ஐ.வி.டி.பி தலைவர் அவர்கள்.



# ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் கனவு இல்லத்திற்கு

## ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் பங்களிப்பு

*“கட்டி முடிக்கப்படாத வீடு ஒருவரின் பாதியில் கலைந்த கனவு*
*சிதிலமடைந்த வீடு ஒருவரின் முழுவதுமாக சிதைந்த கனவு”*

இங்ஙனம் வீடில்லாமல் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் சொந்த இல்லம் என்ற கனவை நனவாக்கும் பொருட்டு, வீடு கட்டும் திட்டத்தை ஐ.வி.டி.பி செயல்படுத்தி வருகிறது. **இத்திட்டத்தின் கீழ் முழுமையாக வீடு கட்டுவதற்கு ரூ. 2 இலட்சமும், வீடு மேம்பாட்டுப் பணிகளுக்காக ரூ. 1 இலட்சமும் நிதியுதவி வழங்கப்படுகிறது.**

அவ்வகையில் பர்கூர், மல்லப்பாடி, வேலன் மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த திருமதி. **மலர்விழி** அவர்களுக்கு, **சொந்த வீடு கட்டுவதற்கு ரூ. 2 இலட்சம் ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.**

# ஐ.வி.டி.பி. நிறுவனத்திற்கு வருகை புரிந்தவர்கள்



**பாங்க் ஆப் இந்தியா** வங்கியின்
கோயம்புத்தூர் மண்டல மேலாளர் **திரு. சசிதரன்** அவர்கள் வருகை



**இந்தியன் வங்கியின்** வேலூர் மண்டல மேலாளர்
திரு. **கிருஷ்ணராஜ்** அவர்கள் வருகை

# கவிதைத் துளிகள்

## பெண்மையைப் பறைச்சாற்றும் புதிய கீதை "குழந்தை" பிரான்சிஸ்

கிருஸ்து அட்டா!
கிருஷ்ணகிரி வந்துவிட்டார்!
"குழந்தை" வந்த குதூகலத்தில்
ஆயிரமாயிரம் பெண்டிர் ஆனந்தக் கூத்தாட
ஆயர்குலமானது கிருஷ்ணகிரி!
மாங்கனி தேசம்! மாதர் தேசமானது!
பெண்மையைப் பறைச்சாற்றும்
புதிய கீதையோ! விவிலியமோ!
எதுவாயினும் சரி
இங்கேயொன்று எழுதப்பட்டு விட்டது!
பெண்ணின் அடிமைத் தளை களைந்து
கெட்ட போரிடும் கந்து வட்டியைக் கந்தலாக்கி...
வறுமைப்பேய் மாய்க்கும்
யூத போதனையோ அன்றி
குருஷேத்ர யுத்தமோ ஏதோயிங்கு
தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது.
கிருஷ்ணகிரி இரட்சிக்கத்
அவதரித்த அருங் "குழந்தை" நீ!
இளையத் தமிழ் போல் என்றும்
இனிதுறவே வாழியவே!

என்றும் அன்புடன்... **மு. கதிரேசன்,** தலைவர் (ஓய்வு)
அதியமான் கிராம வங்கி, தருமபுரி.

## நம்பிக்கை

**செய்ய முடியும் என்று நம்பு.
ஒன்றைச் செய்ய முடியும்
என்று நீ முழுதாய் நம்பும்போது,
உம் மனம் அதைச் செய்து
முடிக்கும் வழிகளைக் கண்டறியும்
ஒரு காரியத்தில்
வைக்கும் நம்பிக்கை,
அந்தக் காரியத்தை முடிக்கும்
வழியையும் காட்டுகிறது.**

## தரணி போற்றும் தமிழன்

காரிப்பட்டியில் பிறந்திட்ட செம்மொழி தமிழனே!
சிறுவயது முதல் தொண்டுச் செய்வதில்
சிறிதும் தோய்ந்திடாத தூயவரே! மாமனிதரே!
42 ஆண்டு தவக்கோலம்!
நானிலம் கொண்டாடும் உன் பொற்காலம்...!
பெண்ணை பேதையென அழைத்தவர் பலர் இருக்க
அவள் என் உடன்பிறப்பென கரம் கொடுத்தவரே!
கல்வியும் கொடுத்தவரே!
எழுதவே தெரியாதவளை
கையொப்பம் இட கற்றுத் தந்தவரே!
வயலில் வேலைப் பார்த்த பெண்ணை
வங்கியில் கணக்கு கேட்க வைத்தவரே!
கையில் கணக்கிட்டவளை கணினியை
இயக்க வைத்தவரே!
கைம் பெண்ணுக்கும் கடவுளாய் நின்றவரே!
தாயும் தந்தையும் இழந்தப் பிள்ளைகளுக்கு
தாயுள்ளம் கொண்டு கல்வித்தொகை தந்தவரே!
தராசு முன்னில் தரம் பார்க்க முடியாத
தகைசால் பெருந்தகையே! தனக்கென்று எதையும்
கொள்ளாமல் தரணி புகழப் பிறந்தவரே...
பிலிப்பைன்ஸ் மண்ணில் நீ பெற்ற விருதால்
பெண்களின் புகழ் பாடி நின்றவரே!
காடு மலைகளைக் கடந்தவரே!
கருணைக் குணம் கொண்டதனால்
காவியைத் துறந்து பாவிகளைப் பாதுகாத்தவரே!
50 பைசாவில் சேமிப்பைத் தொடங்கி
இன்று 876 கோடி சேமிப்பால் மக்களை வளர்த்தவரே!
அணைகளை கட்டி நீர்களை தேக்கினாய்!
கல்வியில்லா ஊரில் பள்ளிகள் அமைத்தாய்!
உயர்ந்த கொள்கையை தேக்கி பலரை மனிதனாக்கினாய்!
ஆண்களை நம்பி குழு அமைத்தாய்!
ஒரு கட்டத்தில் இது செயலறவே
உறங்காமல் சிந்தித்தாய்! உயரம் செல்ல
பெண்கள் குழுவை சந்தித்தாய்
பெண்கள் குழுவின் வளர்ச்சி கண்டு பிரமித்தாய்!
பிரம்மாவைப் போல் பயிற்சி நிறுவனம் படைத்திட்டாய்!
அதை கிருஷ்ணகிரியில் சாந்தமாய் செய்திட்டாய்!
பெண் இல்லா பிரபஞ்சம் என்றுமே
வற்றிவிடும் பெரும்பஞ்சம்!
பெருமளவில் பெண்கள் குழுவை உருவாக்கிட
ஓயாமல் உழைத்திட்டாய்
கால்காசு அரைகாசு என சிறுவாடு
சேர்த்துப் பெண் இன்று சமூகத்தில்
உயர்ந்திட கருவாய் நின்றிட்டாய்!
தாயாய் தந்தையாய் தமையனாய்
உறவாய் உயிராய் உறக்கமாய்
நெருக்கமாய் நிழலாய் பெண்களுக்கென நின்றாய்!
நீவிர் வாழ்க! இந்த வையகம் வாழும் வரை
உம்புகழ் உயரட்டும்! வானம் முட்டட்டும்!
எங்கள் வம்சாவளி உம்மை வாழ்த்தட்டும்!

**மா. பெரியசாமி,** தமிழ்த்துறை தலைவர்
தொன்போஸ்கோ கல்லூரி, தருமபுரி

# கவிதைத் துளிகள்

## இலக்கை நோக்கியப் பயணம் தொடரட்டும்....!

எம் ஏழைப் பெண்களின்
கவலை சொல்ல கல்லும் மணலாகும்.
கண்ணீரை கணக்கெடுக்க கடல் நீரும் சிறிதாகும்
மனக்குமுறலை கூற மலை உருகி மடுவாகும்.
சோகத்தை உணர்த்த சொல்லும் சொற்பமாகும்.
இவர்கள் !
துன்பக்கடலை கடக்க படகாக!
இன்பவானில் பறக்க சிறகாக!
கோழைகளாய் இருந்தவர்களுக்கு
சுதந்திரத் தீயை பற்றவைத்து
சரித்திரமும், சாத்திரமும் படைக்க வைத்தீரே!
ஆறறிவை படைத்தவன் எல்லாம்
அரை மனிதனாய் வாழும் வேளையில்
நீவிர் மட்டும்! ஏழாம் அறிவைப் பெற்று
உழைத்திட்ட உழவன் வாழ்வு பெற – தினம்
களைத்திட்ட மக்களெல்லாம் வளமும் பெற
மக்கள் வறுமையின்றி நாள்தோறும் களித்து வர
நாளைய சமுதாயத்தின் தூண்களாம்
மாணவச் செல்வங்கள் புத்தகம் ஏந்தி
கல்வியை கசடற கற்க
வயிறு பசிக்கும் அறிவுப்பசிக்கும்
அருமருந்தாய் மாறினீரே!
கடவுள் கேட்டதையும் கொடுப்பார்
கேளாததையும் கொடுப்பார் எனில்
இவரும் எம் ஏழைப் பெண்களுக்குக் கடவுளே!
கல்லை சிலையாக்குபவர் சிற்பி எனில்
ஏழைப் பெண்களின் வாழ்க்கையெனும் சிலையை
வடிவமைக்கும் இவரும் சிற்பியே!
விதையோடு மண்ணாய்
பயிரோடு உயிராய்
மனிதருள் மாணிக்கமாய் நின்று
மக்கள் மனங்களில் என்றும் நிறைந்து!
வருங்கால சந்ததியரும், வாழ்கின்ற சந்ததியரும்
நிறைவான வாழ்வு பெற!
விண் தாண்டி, மலை தாண்டி, கடல் தாண்டி – உம்முடைய
இந்த இலக்கை நோக்கிய பயணம் தொடரட்டும்....!

என்றும் அன்புடன்... மு.சத்யா,
ஐ.வி.டி.பி. தலைமை அலுவலகம், கிருஷ்ணகிரி



d.light

# சோலார் விசிறிகளை சிறப்பாக பராமரிக்கும் வழிமுறைகள்

## ☑ செய்ய வேண்டியவை :

- சோலார் ஃபேனோடு கொடுக்கப்பட்டுள்ள சோலார் பேனலைப் பயன்படுத்தி மட்டும் விசிறியை Charge செய்யவும்.
- தினசரி காலை 7.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை சூரிய ஒளியில் Charge செய்யவும்.
- சோலார் பேனலை Charge செய்யும் போது, பேனலுக்கு அதிக சூரிய ஒளியில் கிடைக்கும் வகையில், பேனல் தெற்கு திசையை நோக்கி இருக்குமாறு வைப்பது சிறந்தது.
- சோலார் பேனலில் தூசு படிந்திருப்பின் மென்மையான, காய்ந்த துணியைக் கொண்டு சுத்தம் செய்யவும்.
- புதிய சோலார் ஃபேனைப் பயன்படுத்தும் (அல்லது) பொருத்தும் முன்பு ஐ.வி.டி.பி பணியாளர்கள் வசம் உள்ள வழிகாட்டி வீடியோவைப் பார்ப்பது நல்லது.
- 1 வருட வாரண்டியின் போதும், வாரண்டிக்கு பின்பும் சர்வீஸ் தேவை ஏதுமிருப்பின் ஐ.வி.டி.பி கிளை அலுவலகத்தை மட்டும் தொடர்பு கொள்ளவும்.

## ☒ செய்யக் கூடாதவை :

- சோலார் பேனலின் ஒயரை பேனலில் சுற்றி வைக்கக் கூடாது. ஒயரை தனியாகச் சுற்றி வைக்க வேண்டும்.
- சோலார் விசிறியை மழையில் நனைய விடக்கூடாது. விசிறியின் பாகங்களின் மீது அதிக அழுத்தம் கொடுக்கக் கூடாது.
- சோலார் ஃபேனை வெளியில் உள்ள சர்வீஸ் மையத்தில் பழுது நீக்க கொடுக்கக் கூடாது. அப்படி கொடுத்தால் விசிறியின் வாரண்டி செல்லுபடியாகாது.
- வாரண்டியின் கீழ் தொழில் நுட்ப பிரச்சனைகள் மட்டுமே சரி செய்து தரப்படும். விசிறியின் உதிரிபாகங்கள் உடைந்தால் மாற்றித் தரப்படமாட்டாது

Hindustan Unilever Limited

# hul - RO DEVICE



₹ 7,850.00
தண்ணீர் சேமிப்பு அளவு : 6 லிட்டர்



₹ 12,140.00
தண்ணீர் சேமிப்பு அளவு : 7 லிட்டர்



₹ 17,505.00
தண்ணீர் சேமிப்பு அளவு : 10 லிட்டர்

| RO MACHINE | பேட்டரி | பேட்டரி மாற்றும் நிலை | கம்பெனி விலை | ஐ.வி.டி.பி.விலை |
|---|---|---|---|---|
| Nirtro - Marvello RO | GKK 1 | 4000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 2,500~~ | ₹ 2,350 |
| | GKK 2 | மாற்றியதிலிருந்து 4000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 3,650~~ | ₹ 3,300 |
| Mineral RO | GKK | 6000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 2,750~~ | ₹ 2,550 |
| Classic RO | GKK | 4000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 2,750~~ | ₹ 2,550 |
| Pureit Battery | GKK | 3000 லிட்டருக்கு பிறகு | ~~₹ 1,025~~ | ₹ 900 |

## பேட்டரியின் முக்கியத்துவம்

தண்ணீரில் உப்பின் அளவைப் பெருமளவு குறைத்து, ஊட்டச்சத்துமிக்க குடிநீராக மாற்றுகிறது.

நிலத்தடி நீரில் உள்ள தேவையற்ற கனிமங்களை வெளியேற்றி கேன்சர் போன்ற பேரழிவு நோயிலிருந்து காக்கிறது.

குடிநீரில் உள்ள பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்கிருமிகளை அழித்து காய்ச்சல், தலைவலி, இருமல், சளி போன்றவற்றிலிருந்து தற்காத்துக் கொள்ள உதவுகிறது.

- RO வாங்கும் போது வீட்டில் TANK வசதி உள்ளதா என்பதை பார்க்கவும். TANK வசதி இல்லையெனில் PUMP மூலம் பொருத்தும் வசதி உள்ளது.
- RO-ஐ TANK-ல் தண்ணீர் இல்லாமல் இயக்கினால் Membrane, Pump ஆகியவை பழுதாக வாய்ப்பு உள்ளது.
- RO-ல் Blue Colour Light எரிந்தால் Sediment Filterயும், Red Colour Light எரிந்தால் பேட்டரியையும் மாற்றுதல் அவசியம்.
- Classic RO-ல் Light ஏதும் எரியாது. தண்ணீரின் சுவை மாறினால் பேட்டரியை மாற்ற வேண்டும்.
- Warranty Time-ல் பிற உதிரிபாகங்கள் மாற்றித் தரப்படும். ஆனால் பேட்டரி மட்டும் தாங்களே மாற்றி கொள்ள வேண்டும்.
- பேட்டரியை Loan மூலம் பெற்று, தவணை முறையில் பணத்தை திருப்பி செலுத்தலாம்.



"பாசம் கூடினாலும் பாரம் குறைந்தாலும் பாரம்"

# ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்கள் விபரம் (செப்டம்பர் 2021 வரை)

✦ ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் ✦ ஐ.வி.டி.பி. கிளைகள் : 74

| விபரம் | மார்ச் 2021 வரை | ஏப்ரல் - செப்டம்பர் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி.-யிலுள்ள மொத்த சுய உதவிக்குழுக்கள் | 14676 | 164 | 14840 |
| மொத்த சுய உதவிக்குழுக்கள் உறுப்பினர்கள் | 264168 | 2952 | 267120 |
| ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு | ₹ 875.60 கோடி | ₹ 54 கோடி | ₹ 929.60 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப் பங்கீடு | ₹ 661.00 கோடி | - | ₹ 661.00 கோடி |

## கடன் விவரம்

| விபரம் | மார்ச் 2021 வரை | ஏப்ரல் - செப்டம்பர் 2021 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 4491.26 கோடி | ₹ 333.00 கோடி | ₹ 4824.26 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை | ₹ 3730.22 கோடி | ₹ 106.40 கோடி | ₹ 3836.62 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 206.26 கோடி | ₹ 17.10 கோடி | ₹ 223.36 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 207.24 கோடி | ₹ 9.80 கோடி | ₹ 217.04 கோடி |
| மொத்தம் | ₹ 8634.98 கோடி | ₹ 466.30 கோடி | ₹ 9101.28 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி. (செப்டம்பர் 2021 வரை)

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம், நாட்றாம்பாளையம், தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி | ₹ 38.00 கோடி |
| கார்கில் போர், குஜராத் புகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரளா வெள்ளம், கஜா புயல், நீலகிரி மாவட்ட வெள்ளம் போன்ற நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.86 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 3.72 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள் (குடிசை தீ விபத்து நிதி உதவி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர்தின பரிசுகள், தையல் பயிற்சிகள்) | ₹ 0.59 கோடி |
| மருத்துவமனை, சிறைகள், தொழுநோயாளிகள், முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், கடை நிலைப் பணியாளர்களுக்கான நிலைவைப்பு | ₹ 2.02 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதி உதவி | ₹ 0.45 கோடி |
| ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி, கோட்டையூர், ஐ.வி.டி.பி கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மைய கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 14.90 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 22.68 கோடி |
| ஊக்குனர் மற்றும் பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை | ₹ 6.60 கோடி |
| கடந்த 42 ஆண்டுகளில் மனித நேயப் பணிகளுக்காக ஐ.வி.டி.பி. வழங்கிய தொகை | ₹ 100.82 கோடி |

பெண்கள் மேம்பாட்டில் ஐ.வி.டி.பி.யின்
இன்னுமொரு அத்தியாயம்!!!




ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழுக்கள்

# தொழிற்பயிற்சி மையம்

சிட்கோ தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி.


INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
(Regd. No. 69/79)

ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம், 9எ. சாந்தி நகர், 3வது கிராஸ், கிருஷ்ணகிரி- 635 001, தமிழ்நாடு, இந்தியா
04343-232 129, 236 420 francis@ivdpkrishnagiri.org www.ivdpkrishnagiri.org